**<u>முதன்மை மாவட்ட  நீதிமன்றம், அரியலூர்</u>**

**<u>முன்னிலை :</u>** திருமதி. டி. மலர்வாலன்டினா., எம். எல்.,

முதன்மை மாவட்ட நீதிபதி,

அரியலூர்.

**2025 –ம் ஆண்டு அக்டோபர் மாதம் 9–ம் நாள் வியாழக்கிழமை**

**<u>2056 திருவள்ளுவராண்டு விஸ்வாவசு வருடம் புரட்டாசி திங்கள் 23 – ம் நாள்</u>**

**<u>I.A.11/2025 in OS 10/2022</u>**

**<u>CNR No.TNAL010005292022</u>**

சுசிலா – மனுதாரர்/6 – ம் பிரதிவாதி

– எதிர் –

சாந்தி – எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு என் முன்பாக 23.09.2025 அன்று இறுதி விசாரணைக்காக வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. T. வேல்மணி அவர்கள் ஆஜராகியும் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. N. மணி அவர்கள் ஆஜராகியும் இருதரப்பு வாதங்களைக் கேட்டும், இதுநாள் வரையில் பரிசீலனையில் இருந்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151–ன் கீழ் மனுவில் கண்ட சொத்தை அசல் வழக்குரையில் சேர்த்து மேற்படி அசல் வழக்கினை தொடர்ந்து நடத்திட அனுமதி வழங்கக் கோரி மனுதாரர்/6–ம் பிரதிவாதியால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>௨. மனுவின் சுருக்கம்</u>**

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் 6 – ம் பிரதிவாதி இம்மனுவின் எதிர்மனுதாரர் வாதி பாக பரிகாரத்திற்காக அசல் வழக்கை தாக்கல்

செய்துள்ளார். 1–ம் பிரதிவாதி மனுதாரரின் கணவர், மனுதாரர் அவருடைய கணவரின் சுயவருமானத்தைக் கொண்டு மனுதாரரின் பெயரில் சர்வே எண். 209/3A ல் 1 ஏக்கர் 36 செண்ட் சொத்தை கிரயம் பெற்று மனுதாரரும் அவரது கணவரும் அனுபவம் செய்து வந்துள்ளனர். இந்நிலையில் குடும்பத்தில் ஏற்பட்ட கடனை அடைப்பதற்கும் குடும்ப செலவிற்கும் பணம் தேவைப்பட்டதால் தன்னுடைய மகள் வாதி சாந்தியின் கணவர் கடன் கொடுப்பதாகவும் அதற்குப் பிணையமாக சொத்துப் பத்திரம் எழுதிக் கொடுத்தால் கடன் வாங்கித்தருவதாக கூறினார். இந்நிலையில் மனுதாரரின் கணவரும் தானும் வாதி பெயரில் உள்ள நம்பிக்கையின் அடிப்படையில் குடும்ப சொத்தாக மனுதாரர் பெயரில் உள்ள சொத்தை வாதி பெருக்கு கடந்த 07.10.2023 தேதியில் எழுதிக் கொடுத்து 1–ம் பிரதிவாதியும் தானும் கடன் பெற்றதாகவும் பின்னிட்டு கடனை அடைத்துவிட்டதாகவும் மேற்படி கடன் வாங்கும்பொழுது ஏற்பட்ட பத்திரம் வாதி பெயரில் இருந்ததினால் வாதி தன்னுடைய மகள் என்பதாலும் மேற்படி பத்திரத்தை உடனே ரத்து செய்யவில்லை. பின்னிட்டு மனுதாரருக்கும் வாதிக்கு பிரச்சனை ஏற்பட்டு வாதி தூண்டுதலின் பேரில் 2–ம் பிரதிவாதி குடும்பத்தில் பிரச்சனை செய்து வந்த நிலையில் 1–ம் பிரதிவாதி ஊர்முக்கியஸ்தர்களையும் குடும்ப உறுப்பினர்களையும் அழைத்து 2015–ம் ஆண்டு மே மாதத்தில் பாகம் பிரிக்கமுற்பட்டு 1–ம் பிரதிவாதி வாதிக்கு சில சொத்துக்களை கொடுத்து வாதியின் பெயரில் ஏற்கனவே எழுதி வைத்து 07.10.2023 தேதிய செட்டில்மெண்ட் சொத்தினை ரத்து செய்யக் கேட்டதற்கு வாதி தனக்கு எந்த சொத்தும் வேண்டாம் 07.10.2003 தேதிய தான செட்டில்மெண்ட் பத்திரத்தை ரத்து செய்து கொடுக்க முடியாது என்று பிரச்சனை செய்து வந்தார். வேறு வழியின்றி 1–ம் பிரதிவாதி 07.10.2003 தேதிய தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் கண்ட 209/3A – 1 ஏக்கர் 36 செண்ட் சொத்தை பாகமாக

வாதிக்கு கொடுத்துவிட்டார். இவ்வாறாக வாதி குடும்பத்தில் பிரச்சனை செய்து 1 கோடி மதிப்புள்ள சொத்தை சட்டவிரோதமாக மிரட்டி பாகமாக வாங்கிக்கொண்டார், பின்னர் 1–ம் பிரதிவாதி சாமிதுரைக்கு ஒரு பாகமும் மற்றும் 2 மற்றும் 3 பிரதிவாதிகளுக்கு தலா ஒரு பாகமும் ஒதுக்கப்பட்டது. இந்நிலையில் வாதி குடும்பத்தில் பாகம் பிரிந்ததற்கு விரோதமாக பாகம் கோரி அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார். உண்மையில் பாகப்பிரிவினை வழக்கு எனில் வாதிக்கு ஏற்கனவே பாகமாக கொடுத்த சொத்தையும் உள்ளடக்கித்தான் பாகம் பிரிக்கப்படவேண்டும். ஆனால் வாதி அவருக்கு ஏற்கனவே ஒதுக்கப்பட்ட சொத்தான சர்வே எண். 209/3A சொத்தை விடுவித்து பிரதிவாதிகளுக்கு ஒதுக்கிய பாக சொத்தில் மட்டும் பாகம் கேட்பது ஏற்புடையது அல்ல. வாதி கடந்த 2015–ல் ஏற்பட்ட பாகத்தை ஏற்கவில்லை எனில் ஏற்கனவே அவருக்கு பாகமாக வழக்கப்பட்ட சொத்தான சர்வே எண். 209/3A– 1 ஏக்கர் 36 செண்ட் சொத்தை அசல் வழக்கில் சேர்ப்பதற்கு அனுமதிக்கக் கோரி மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார்.

**3. எதிர்மனுதாரர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம்**

அசல் வழக்கில் இரு தரப்பு சாட்சிகளும் விசாரணை செய்யப்பட்டு வாதுரைக்குப் பிறகு எக்ஸ்பார்ட்டி செய்யப்பட்ட வாதியின் தாயாரான 6–ம் பிரதிவாதி எக்ஸ்பார்ட்டி ரத்து மனுவை தாக்கல் செய்துள்ளார். அதன் பின்னர் சொத்து விடுபட்டுள்ளதாகக் கூறி தற்போது சொத்து சேர்க்க மனு கொடுத்துள்ளார். கடந்த 14.08.1972 தேதிய சரியான பிரதிபிரயோஜனத்திற்கு ராசு படையாச்சியிடமிருந்து அவருடைய மைனர் குழந்தைகளுக்கு கார்டியன் முறையில் சுசீலாவிற்கு கிரயம் கொடுத்த சொத்தின் ஒரு பகுதி சொத்தை சசீலா 07.10.2003 தேதிய தான் செட்டில்மெண்ட் அடிப்படையில் மகளான வாதி சாந்திக்குக் கொடுத்துள்ளார். வாதி சாந்தி மேற்படி தான

செட்டில்மெண்ட்டை ஒப்புக் கொண்டு பட்டாவும் பெற்று வாய்தா ரசீது செலுத்தி வருகிறார். தாயார் அவருக்கு சொந்தமான சொத்தை அவர் விருப்பப்படி செட்டில்மெண்ட் எழுதிக் கொடுத்த சொத்தை தகப்பனார் வழி பூர்வீக சொத்தைப்பொறுத்து தாக்கல் செய்யப்பட்ட பாக வழக்கில் சேர்க்கக்கோரி சட்டப்படி மனு தாக்கல் செய்ய இயலாது. தாயார் சொத்திற்கும் தகப்பனார் சொத்திற்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை, வேண்டுமென்றே வாதி பாக வழக்கை தாக்கல் செய்துவிட்ட விரோதத்தில் தாயார் 22 வருடங்களுக்கு முன்பு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் சொத்தை இந்த பாக வழக்கில் சேர்க்க வேண்டுமென்று உண்மையை மறைத்து பொய்யாக இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்கள், மேலும் 14.08.1972 ம் தேதிய கிரய சொத்தின் மீதி பகுதியை பொறுத்து 25.11.2021 தேதியில் இந்த வழக்கின் 3—ம் பிரதிவாதியாகிய வாதியின் சகோதரர் குமாரின் மகன்களான பாஸ்கர் மற்றும் பாலாஜி ஆகியோர்களுக்கு எழுதிக் கொடுத்த கிரய சொத்தை இந்த வழக்கில் சேர்க்க மனு கொடுக்கவிலை, இதிலிருந்து வாதியை பழிவாங்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் வாதிக்கு எழுதிக் கொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தில் கண்ட சொத்தை இந்த பாக வழக்கில் சேர்க்க மனு கொடுக்கப்பட்டுள்ளது. எனவே, மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்று கூறி எதிருரை தாக்கல் செய்துள்ளார்.

4. தற்போது தீர்வுக்குரிய பிரச்சினை என்னவென்றால் மனுதாரர் கோரியுள்ள பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதா? இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதாகும்.

**5. பிரச்சனைக்கான தீர்வு**

இவ்வழக்கின் எதிர்மனுதாரர்/வாதியால் அசல் வழக்கின் பிரதிவாதிகளுக்கு எதிராக பாகப்பிரிவினை கோரி கடந்த 15.02.2022–ல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவின் மனுதாரர் இவ்வழக்கின் 6–ம் பிரதிவாதி ஆவார். 6–ம் பிரதிவாதி தாயார் மற்றும் வாதி மகள் என்ற உறவு முறை ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. இதில் இந்த மனுதாரர் மற்றும் இதர பிரதிவாதிகளின் கூற்று பொதுக் குடும்ப சொத்துக்கள் ஏற்கனவே பாகம் பிரிக்கப்பட்டுவிட்டது என்பதாகும். உறவு முறை ஒப்புக்கொள்ளப்பட்டிருந்தாலும் பாகம் பிரிக்கப்படவில்லை என்பது வாதியின் கூற்றாகும். அசல் வழக்கு தாக்கல் செய்தபோது வாதியின் தாயாரான இந்த பிரதிவாதி சுசீலா வழக்கில் தரப்பினராக சேர்க்கப்படவில்லை. பின்னிட்டு 30.10.2023 தேதியில் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளார். இந்த மனுவில் மனுதாரரான தாயார் சுசீலா எதிர்மனுதாரரான தனது மகள் சாந்திக்கு கடந்த 07.10.2003 அன்று ஒரு சொத்தை தான செட்டில்மெண்ட் கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. தற்போது இந்த மனுவில் மனுதாரர் தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் கண்ட சர்வே எண்.209/3A சொத்தை பாகமாக வாதிக்கு கொடுத்துவிட்டதாகக் கூறியுள்ளார். மேற்படி சொத்தானது பாக சொத்து அல்ல தாயார் தனக்கு கொடுத்த தான செட்டில்மெண்ட் என்பது வாதியின் கூற்றாகும் என்றாலும் இது குறித்து அசல் வழக்கில்தான் முடிவு செய்ய இயலும். எனவே மனு சொத்தாக மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ள சொத்தினை அசல் வழக்குரையில் சேர்த்து வழக்கை மேல் நடத்த உத்தரவிடப்படுகிறது.

முடிவாக, இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு இன்று 2025 –ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 9–ம் நாள் என்னால் உத்தரவு அவையறிய பகரப்பட்டது.

MALARVALANTINA THILLAIVANAM

Digitally signed by MALARVALANTINA THILLAIVANAM
Date: 2025.10.09 18:15:59 +0530

**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**அரியலூர்**